# தேசீய சம்பள நிர்ணய சபை நிறுவ சட்டம் வரும்


Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 308
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 21 றஜப். 2 சனிக்கிழமை [7-10-67[


கொழும்பு, வெள்ளி

நாடு முழுவதிலுமுள்ள எல்லா ஸ்தாபனங்களிலும் தொழில் புரியும் சகல ஊழியர்களையும் உள்ளடக்கும் வகையில் தேசிய சம்பள நிர்ணய சபையொன்றை நிறுவுவதற்கென புதிய சட்டமொன்றை மிக விரைவில் தொழில் மந்திரி ஜனுப் எம். எச். முகமது பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்யவிருக்கின்றார்.

தேசிய அடிப்படையில் சம்பள நிர்ணய சபையொன்றை நிறுவுவதற்கு 1956-ம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு கமிஷன் அப்படியான கமிஷனை நிறுவும்படி 1960-ல் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்தது. ஆனல் அச்சிபாரிசின் மீது எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

தேசிய சம்பள நிர்ணய சபையொன்றை விரைவில் நிறுவவேண்டும் என்று

(6-ம் பக்கம் பார்க்க)

# வஞ்சந்தீர்க்கும் முறையில் பலாத்காரம் வேண்டாம்

## பொலிஸ் அதிகாரிகளுக்கு ஐ. ஜி. பி. சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், சனி

"பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் எப்பொழுதும் தங்கள் மன உறுதியுடன் நடந்துகொள்ள வேண்டும். ஆனல் பலாத்காரம் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். மிகக் குறைந்த பலாத்காரம் அவசியம் தான். ஆனல் வஞ்சம் தீர்க்கும் முறையாகவோ பொலிஸ் படையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடனே பலாத்காரம் உபயோகிக்கப்படுவதை நான் ஒரு போதும் அனுமதிக்கமாட்டேன்"

மேற்கண்டவாறுபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக் அபயகுணவர்த்தன, பொலிஸ் சுப்பிரின்டன்டுகளுக்கும், உதவி பொலிஸ் சுப்பிரின்டன்டுகளுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட சில அசம்பாவிதமான சம்பவங்கள் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## இம்சைக்குள்ளாகும் 'நாடற்ற' மக்கள்

### கிளிநொச்சி எம்.பி யிடம்முறைப்பாடு

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சியில் 'நாடற்ற' பிரஜைகள், புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளசட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காக பொலிஸ் பகுதியினரால் மிகவும் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக கிளிநொச்சி எம். பி. க்குச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். ஏற்கனவே விசாரிக்கப்பட்டு நிரூபிக்கப்பட்டவர்களும். அரிசிப் பங்கீட்டுப் புத்தகம் வைத்திருப்பவர்களும், இந்த விசாரணைக் குட்படுத்தப்பட்டு இம்சைப் படுத்தப்படுவதாக கிளிநொச்சி எம். பி. க்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வடக்கில் அரிசிக் கடத்தல் நடக்கிறதென்று

[6-ம் பக்கம் பார்க்க]

### 100 ஆண்டின் பின் குடிநீர் வசதி

யாழ்ப்பாணம், சனி

கடந்த நூறு வருடங்களுக்குப் பின், மானிப்பாய் சோதி வேம்படி தமிழ் பாடசாலை மாணவர்களுக்கு குடிதண்ணீர் வசதி கிடைத்துள்ளது.

கிணறு க்ட்ட அரசாங்கத்திடம் பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிதிஉதவி கோரி பயன் கிடைக்காததால், 1500 ரூபா சேர்த்து ஒரு கிணறு கட்டி குடிதண்ணீர் வசதியளித்துள்ளது.

## ரூ. 2 லட்சம் கைக்கடிகாரங்கள்

### கொழும்பில் கைப்பற்றப்பட்டன

கொழும்பு. வெள்ளி

கொழும்பு நகரப்பகுதியிலுள்ள சில வர்த்தகஸ்தாபனங்களிலிருந்துசுமார் 2லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரங்கள் கள்ளக்கடத்தல் செய்யப்பட்ட பொருள்களெனச் சந்தேகத்தின்பேரில் சுங்கப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டன.

சில தினங்களுக்கு முன்வரும் ரூ. 25,000 பெறுமதியான கைக்கடிகாரங்கள் கள்ளக்கடத்தலெனச் சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்டது தெரிந்ததே.

இவை சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்டவை என்பதற்கான பத்திரங்கள் நிரூபிக்கத் தவறியதன் காரணமாகவே சுங்கப்பகுதியினர் இவற்றைக் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாகக் கள்ளக்கடத்தல் செய்யப்படும் இவ்விதபொருள்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் எந்த வர்த்தகஸ்தாபனத்திலும் திடீரென நுழைந்து பரிசோதனை செய்யலாமென அட்டோர்ணி ஜெனரல் சுங்கப்பகுதியினருக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

இவ்வித திடீர்பரிசோதனை பற்றி பல வர்த்தக ஸ்தாபனங்கள் ஆட்சேபம் தெரிவித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு

# அரிசி எடுத்துச் செல்வது தடை செய்யப்படும்

## உத்தியோகபூர்வமான தகவல்

கொழும்பு, வெள்ளி

இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாகக் கூறப்படுவது சம்பந்தமாக விவசாய அமைச்சு நடவடிக்கைகள் எடுக்கவிருக்கின்றது. இத்தகவல் உத்தியோக பூர்வமாக இன்று அறிவிக்கப்பட்டது.

அரிசி பெருமளவில் உற்பத்தியாகும்வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நாட்டின் மற்றப் பகுதிகளிலிருந்து அரிசி, நெல் கொண்டுசெல்வதற்கு தடை விதிக்கப்படும். கண்டிப்பகுதியிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு அரிசி கொண்டுசெல்வதைத் [illegible] வகையில் [illegible] மகாவலி கங்கையில் [illegible] என்ற இத்தி[illegible]லுள்ள பாலத்தில் பரிசோதனை முகாம் ஒன்று ஏற்படுத்தப்படும். இந்தியாவுக்கு பெருமளவில் பாக்கு கடத்தப்படுவதாகக் கூறப்படும் புகார்கள் குறித்தும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க விவசாய அமைச்சு ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

## நைப்பெண் மரணம் கொலை எனத் தீர்ப்பு

சங்கானை, வெள்ளி

நித்திரையில் வைத்து இரண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த தொல்புரத்தைச் சேர்ந்த கைம்பெண் புனிதவதியின் கொலை சம்பந்தமாக நேற்று மாலை ஸ்தலத்தில் விசாரணை நடத்திய மல்லாகம் நீதிபதி திரு. எஸ். நெத்சிங்கா, கொலை எனத் தீர்ப்பளித்தார். சந்தேக நபர்களான அருணசலம் கிருஷ்ண பிள்ளை, பச்சைமுத்து விநாயகம், பெரியதம்பி சுவாமிநாதன், முதலித்தம்பி தவராசா, வேலாயுதம் திருநாவுக்கரசு, பெஞ்சமின் ஜெயச்சந்திரன் ஆகியோரை இம்மாதம் 12-ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

கொலை செய்வதற்கு பாவிக்கப்பட்டதெனக் கருதப்படும் கத்[illegible] பொலிசார் கிணற்றில் கண்டெடுத்தனர்.


## மலிவு விற்பனை

நெசவுசாலை அல்லது தொழிற்சாலை நிறுவுவதற்கு தேவையான 30 அடி இரும்பு ஊசிக்கால் [ 2''X2'' ஆங்கிள் அயன் ] 7 துண்டுகள் விற்பனைக்கிருக்கிறது. கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம்.

மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

150, ஸ்ரான்லி றேட், --- யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உங்கள் இதயத்திலே, அன்பாகிறதெய்வத்தை கோவில் கொள்ளச் செய்துவிட்டால், உலக மனைத்தும் உங்களுக்கு நட்பாகிவிடும். நீங்கள் மேற்கொள்ளும் எவ்வித தொண்டுக்கும் இயற்கையின் சக்திகளனைத்தும் உங்களுக்குத் துணை புரியும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவருடம் புரட்டாதி மீ 21௳ 7-10-67)

## கல்வி-ஒரு கூட்டுறவு முயற்சி

**கல்வி**, ஒரு கூட்டுறவு முயற்சி என்றும், இதில் ஆசிரியர், மாணவர், அரசாங்கம், பெற்றோர் இந்த நான்கு அம்சத்தினரும் ஒத்துழைத்தால் தான் கல்வியின் நோக்கம் வெற்றிபெறமுடியும் என்றும், உயர்கல்வி தேசிய சபைத் தலைவரான டாக்டர் ஜி. பி. மலலசேகரா, அட்டாளைச்சேனையில் செய்த ஓர் அருமையான பிரசங்கத்தில் சரியாக வற்புறுத்தினார்.

'ஆசிரியர் மேலான கல்வியை மாணவர்களுக்குப் புகட்டவேண்டும். மாணவரும் விருப்பத்துடன் படிக்கவேண்டும். போதிய பணத்தை அரசாங்கம் அளிக்க, பெற்றோர்கள் பிள்ளைகளின் படிப்புக்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்' என்றார். இதை யாரும் மறுக்க முடியாதென்றாலும், நடபடியில் அந்த நான்கு அம்சத்தினருக்கிடையிலும் பல இடங்களில் ஒத்துழைப்பு இல்லாமல், நாட்டின் எதிர்காலச் செல்வமான மாணவரின் படிப்பு குட்டிச்சுவராவதைப் பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணத்திலே ஒரு கல்லூரியில் தலைமைஆசிரியரின் போக்கு சர்வாதிகார முறையிலே இருப்பதாகப் பல ஆசிரியர்கள் ஆட்சேபித்து ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ததாகச் சொல்லப்படுகிறது. ஆசிரியர்கள் சரிவரத்தங்கள் கடமையைச் செய்வதில்லை என்றும் மறுபுறம் புகார்கள். இந்நிலையில் மாணவர் கதி என்ன?

பெற்றோர், ஆசிரியர், கல்லூரித்தலைவர் முதலியோர் அடிக்கடி சந்தித்துப் பேசி, குறைகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வகைசெய்ய வேண்டும். அதிகாரத்தை விட அன்புக்குச் சக்தி அதிகம். கடமையைச் சரிவரச் செய்தால், உரிமை தானாக வரும் என்றார் காந்தியடிகள். மனக்குறையுடன் உள்ளவரை ஆசிரியர் தம் கடமையைச் சரிவரச்செய்ய முடியாது. எந்த ஸ்தாபனத்திலும் வேற்றுமையும் குறையுமில்லாதிருக்க முடியாது தான். என்றாலும், டாக்டர் மலலசேகரா கூறியதுபோல், ஒரு 'கூட்டுறவு முயற்சி' யான கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள சகலரும், நமது உண்மைச் செல்வங்களான குழந்தைகளின் நன்மையைக் கருதி, தங்களிடையே விட்டுக்கொடுத்து, உயர்வு தாழ்வு எண்ணமெதுவுமின்றி வேற்றுமை பற்றி மனம்விட்டுப் பேசுவதாயின் எந்தப்பிரச்னையும் சுமுகமாகத் தீரவும் கல்விப்பணி மேலாகநடைபெறவும் முடியும். பெற்றோர்கள் இவ்விஷயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். துரதிருஷ்டவசமாக அவர்கள்பொதுவாக எவ்வித அக்கறையும் காட்டுவதில்லை. பெற்றோர்கள் இப்படிக்கவலையீனமாக இருந்தால், கல்வி ஸ்தாபனங்கள் எவ்விதம் மேலான முறையில் நடக்க முடியும்.?

## மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி புதுக்குடியிருப்பு- யாழ்ப்பாணம் கிளிநொச்சி காரைநகர் பஸ் சேவைகள்யாவும் கிளிநொச்சி பஸ் சாலைக்கு இம்மாதம் முதலாம் திகதி மாற்றப்பட்டுள்ளது.

[5-ம் கலத்தொடர்ச்சி]

இந்திராவும் கூறமாட்டார். அந்தப்பணமனைத்தும் இலங்கையில் தான் உள்ளன. ஆகவே கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷன் மூலம் இந்தியப் பிரதமரிடம் இலங்கைப்பாலிஸிதாரர்கள் தக்கபடிமுறையிட்டால், பிரதமர் இந்திரா இதைப் பற்றி மனிதாபிமானத்துடன் தீர்மானம் செய்வாரென்றே கொள்ளலாம். அழுகின்ற பிள்ளைக்குத்தானே பால் கிடைக்கும்.

இந்தியக் கம்பெனிகளை நம்பி இன்ஷியூர் செய்தவர்களுக்கு இக்கதி ஏற்பட, பெரிய மனம்படைத்த இந்தியா அனுமதிக்குமா?

ஃ ஃ ஃ

தொண்டராகித் தொழுது
பணிமினே
பண்டை வல்வினை பற்றற
வேண்டுவீர்
விண்டவர்புரம் மூன்மருரு
மாத்திரைக்
கொண்டவன்னுறை
யுங்குட மூக்கிலே

—அப்பர் சுவாமிகள்.

[பழைய வினைகள் நீங்க வேண்டுவீர்களே! அதுநிறைவேற வேண்டின், முப்புரர்திளது மூன்று பலமிக்கநகரங்களையும் ஒரு கணப்பொழுதில் அழித்துவிட்ட சிவபெருமான் உறையும் குடமூக்கில், தொண்டுசெய்யும் அடியவராய் தொழுது பணிவீர்களாக]

## இன்றைய பலன்

7-10-67
சனிக்கிழமை
(புரட்டாதிமாதம் 21௳)

நட்சத்திரம்- விசாகம். பகல் 9-59 மேல் அனுஷம்

திதி- சதுர்த்தி மாலை 5-32 மேல் பஞ்சமி.

சுபநேரம்-3-02 - 4-32.

ராகுகாலம்- 9-02 - 10-32.

மேஷம்-துதிபாடுவோர் உறவைத் துண்டித்துவிடு

ரிஷபம் - கனிவான நினைவு. கண்ணியம்சேரும்

மிதுனம் - கிட்டிவரும் பகை, எட்டிநில்.

கடகம்- இனியவை நடக்கும், இனசன மகிழ்ச்சி.

சிம்மம்- இல்லத்துயர், இடம்மாற எண்ணம்.

கன்னி- நண்பர்கள் வருவர் நற்செய்தி தருவர்.

துலாம்- அவசர முடிவு, அமைதிக்கு வேட்டு.

விருச்சிகம் - அரசினர் பகை, அவதானம் வேண்டும்.

தனுசு - இன்சொல் மொழிதல், இனியவை நாடல்.

மகரம் - எள்ளிச் சிரிக்காதே, துள்ளிவரும்பகை.

கும்பம்-அறிவுதத கம், கற்றோர் உறவு.

மீனம் - இதயத்தைப் பேசவிடு, இன்பம் காணலாம்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலும்பிள்ளை

## அன்னை அவள்

- இ. நா. -

அன்னை யாக என்றும் என்னுள்
அமர்ந்து கொண்டவள்—துயர்
தன்னை ஒட்டித் நயவு காட்டித்
தாங்கிக் கொண்டவள்—அவள்

வீர மோடு கல்வி செல்வம்
விளங்கச் செய்தவள்—துயர்
தூர ஓட அருளைக் காட்டித்
தூக்கி வைத்தவள்—அவள்

பூவில் ஏரிப் புறத்தில் ஆழி
பொலியும் வடிவினள்—என்
நாவி ஏறி நயந்து பாடல்
நண்ணிக் காத்தவள்—அவள்

கண்ணில் எங்கும் காணும் யாவும்
கலந்து நின்றவள்—உயர்
விண்ணில் மண்ணில் மேவி ஏற்றம்
விரும்பிச் செய்பவள்—அவள்

ஒருத்தி யாகி ஓங்கி மண்ணில்
உயர்ந்து நிற்பவள்—அருள்
விருத்தி யாகி மேன்மை மேவ
விரும்பி நிற்பவள்—அவள்

சக்தி வாணி திருவு மாகி
சகம்பு ரப்பவள்—உயர்
பக்தி கொண்ட நெஞ்சில் அன்புப்
பண்பு காட்டுவாள்—அவள்

போற்று கின்ற நெஞ்சம் எங்கும்
பொலிந்து நிற்பவள்—ஒளி
ஏற்றி யென்று இருளை நீக்கி
இதம ளிப்பவள்—அவள்

காவில் பூவில் கழனி யாவும்
கவின ளிப்பவள்—எழில்
மேவி நிற்க விந்தை காட்டி
மேன்மை செய்பவள்—அவள்

ஆசிரியருக்கு கடிதங்கள்

## சுகாதார அமைச்சர் கவனிப்பாரா?

சுகாதார மந்திரி எல்லா சௌக்கிய பகுதி அதிகாரிகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதனை எவராகுதல் கவனத்தில் கொண்டுள்ளார்களா?

1945ம் ஆண்டு டாக்டர் எஸ். இராஜேந்திரத்தின் முயற்சியலே மலேரியா முற்றாகத் தடுக்கப்பட்டது. இதன்பின்னர்தான் கமத்தொழில், நீர்ப்பாசன, காணி அபிவிருத்தித் துறையில் முன்னேற்றம் காணப்பட்டது. தற்பொழுதுள்ள நிலையில் நாம் முந்திய நிலைக்கே சென்றுள்ளோம். இதன்காரணமாக உணவு உற்பத்தி இயக்கம் தடைபடும் என்பதை மந்திரி உணரவேண்டும். வேறு பல நோய்களும் நாட்டில் அதிகரித்துள்ளன. புற்றுநோயின் காரணமாக வடக்கில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். மொழிக்கஷ்டம் காரணமாக சிலர் மஹாரகம ஆஸ்பத்திரிக்குச் செல்லாது செத்து மடிகின்றனர். இதற்கான சிகிச்சை நிலையமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதற்கு மந்திரி எதுவிதஒழுங்கும் மேற்கொள்ளவில்லை. கொபால்ட் இயந்திரமொன்று மஹாரகம ஆஸ்பத்திரியில் தேடுவாரற்றுக் கிடக்கிறது. இதனை யாழ்ப்பாணத்தில் ஏன் நிறுவி இயக்கக் கூடாது.

யாழ்ப்காணத்தில் ஒன்றரை ஆண்டிற்கு முன்னர் பிரசவ அறையில் ஒன்பது பிள்ளைகளின் தாயார் இறந்ததுபற்றிய அறிக்கை இன்னமும் வெளிவரவில்லை. சாதாரணமாக ஒரு நோயாளி இறந்து 24 மணித்தியாலங்களுக்குள் வைத்தியஅத்தியட்சகர் இறந்தது சம்பந்தமான விசாரணை நடாத்த வேண்டும்.

ஒரு நோயாளி இருதய நோய் சம்பந்தமாக யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சொல்லப்பட்டு 'மோப்பியர்' மருந்து இல்லாத தன் காரணத்தினால் இறக்க நேரிட்டது. இதுபற்றியும் இதுவரை அறிக்கையும் சமரிப்பிக்கப்படவில்லை. தவறுசெய்யும் அதிகாரிகளை பதவிஉயர்த்தும் மந்திரியின் முறையை யார் விரும்புவார்கள்?

கே. கனகரத்தினம்
[முன்னாள் வைத்திய அத்தியட்சகர்]
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

### தலைவர் பங்கு கொள்ளவில்லை

"பெற்றோர் ஆசிரியர்மாணவர் அதிருப்தி" என்னும் தலைப்பின் கீழ் இம்மாதம் முதலாம் திகதி ஈழநாட்டில் 'நகர பிதா திரு. வி. ரத்தின வடிவேலுவின் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் கோஷ்டியொன்று வடபகுதி வித்தியாதிபதியைச் சந்தித்து ஆட்சேபம் தெரிவிக்கவிருக்கின்றது" எனச் செய்தியொன்றுவெளியிடப்பட்டுள்ளது. ஆனால் வல்வை சிதம்பரக்கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் சோ. சுந்தரலிங்கம் [உபதலைவர்] வே. வேற்பிள்ளை [செயலாளர்] அடங்கிய கோஷ்டியே பருத்தித்துறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினத்துடன் வடபகுதி வித்தியாதிபதியைக் கண்டு பேசியதின் விளைவாக திரு. அருள்சுந்தரம், பிரதம ஆசிரியரின், இடமாற்றம் ரத்தும் செய்யப்பட்டது. இந்தக் கோஷ்டியில் நகரசபைத் தலைவர் திரு. வி. ரத்தினவடிவேலு பங்குபற்றவில்லை.

ஆ. வே. வேற்பிள்ளை
[செயலாளர், சிதம்பராக் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம், வல்வை]

ஃ ஃ ஃ

### யார் பொறுப்பு?

சென்ற திங்கட்கிழமை பிற்பகல் 12-10-67 2 மணிக்கு; வடஇலங்கைச் சங்கீத சபையின் மிருதங்கப் பயிற்சி 3-ம் ஆண்டுப் பரீட்சை யாழ்/வண் இந்துக்கல்லூரி தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடக்குமென எனது மகனுக்குநேர அட்டவணை அனுப்பப்பட்டிருந்தது.

[6-ம் பக்கம் பார்க்க]

## ஐயாறன் எழுதுகிறது

இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி கொழும்பிலே பத்திரிகைப் பிரதிநிதிகள் மகாநாட்டில் பல கேள்விகளுக்கும் சற்றும் தயங்காமல் 'டக்' 'டக்' என்று பதிலளித்தார். சுமார் 80 பேர்களுக்கு மேற்பட்ட பத்திரிகைப் பிரதிநிதிகள் கூடி இருந்தனர். தமது புகழ்பெற்ற தந்தையான நேருவிடம் பெற்ற பயிற்சி போலும், அவர் பத்திரிகையாளரை நண்பர்களாகக் கொண்டு சகஜமாகப்பேசினார். ஏதோ நீதிமன்றத்தில் கைதியைக் குறுக்குவிசாரணை செய்வது போல் அவர் எண்ணவில்லை. மனதில் ஏதும் கள்ளமிருந்தாலல்லவோ தயங்கவேண்டும்? கேள்விகள் நின்றுவிட்டன. எல்லாரையும் ஒருமுறைபார்த்து புன்முறுவல் செய்து இன்னும் ஏதாவது கேட்கலாம் என்றார்.

அங்கு வந்திருந்த பல பெண் நிருபர்கள், குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிக் கேட்டனர். எனக்குப்பின் விருந்த ஓர் ஆங்கிலப் பத்திரிகையின் மூத்த பிரதிநிதிக்கு என்ன கேட்பதென்றே தெரியவில்லை. "ஏதாவது கேள்வியைச் சொல்லிக்கொடுங்கள்; கேட்கிறேன்" என்று மெதுவாக என்னிடம் கேட்டார். எனக்கும் தெரியவில்லை,

ஃ ஃ ஃ

இலங்கைப் பிரதமராக பண்டாரநாயகா இருந்தபோது ஒவ்வொரு வாரமும் பத்திரிகை மகாநாடு நடத்தினார். பால்சோறு கொடுத்து, பத்திரிகை பிரதிநிதிகளை நண்பர்களாக மதித்தார். பின்னர் அவரது மனைவியார் பிரதமரானதும், ஒருமுறையாவது பத்திரிகை மகாநாடு கூட்டவில்லை. ஏனென்று விசாரித்ததில் அவருக்கு பத்திரிகைக்காரரிடம் பயமென்றும், எக்கச்சக்கமான கேள்வி ஏதும் கேட்டால் என்னசெய்வதென்றே பத்திரிகை மகாநாட்டைக்கூட்டுவதில்லை என்றும் கேள்விப்பட்டேன். உண்மைதானா? இப்போது பிரதமராகியுள்ள டட்லியும் பத்திரிகைப் பிரதிநிதிகளை அழைத்து கேள்விகளுக்கு பதில்கூறுவதில்லை. ஏன்?

பத்திரிகைகள் மீதும் நம்பிக்கையும்மதிப்பும்வைத்து, பிரதமர் பத்திரிகை மகாநாட்டை மாதம் ஒருமுறையாவது நடத்துவதாயின், அரசியல் முதலிய பல சந்தேகங்களைத் தீர்க்கமுடியும். ஜனநாயகம் வெற்றி பெற பத்திரிகைகளின் ஒத்துழைப்பு எவ்வளவு அவசியமென்பதை விளக்கத்தேவையில்லை. இனியாவது அவர் இவ்வித மகாநாடுகளை நடத்துவாரா?

ஃ ஃ ஃ

இந்திராகாந்தி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், ரூபாய் மதிப்பை உயர்த்தப் போவதில்லை என்றும், ரூபாய் மதிப்பைக்குறைத்ததால் சுமார் 70 லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டமடைந்த இலங்கைப்பாலிஸிதாரர் யாரும் தம்மிடம் இது பற்றி முறையிடவில்லை என்றும் குறிப்பிட்டார். பத்திரிகையில் கிளர்ச்சி செய்தவர்கள், இங்கு வந்தபிரதமரிடம் கேட்காதது ஆச்சரியமே!

இந்திய ரூபாய் மதிப்பைக் குறைத்ததால், இலங்கையர், தங்கள் இன்ஷியூரன்ஸ் சேமிப்புப்பணத்தை லட்சக் கணக்கில் இழக்கும்படி செய்தது நியாயமென்று பிரதமர்

[2-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் கடற்தொழிலாளருடன் லண்டனில் சீனர் மோதல்

லண்டன், ஒக்டோபர் 6

லண்டனில், சீன மாலுமிகளுக்கும் பிரிட்டிஷ் துறைமுகத் தொழிலாளர் சிலருக்குமிடையே நேற்று ஏற்பட்டவொரு கலவரத்தைத் தகித்து நிறுத்தப் பொலிசார், சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்றனர்.

ஒரு பிரிட்டிஷ் தொழிலாளியின் சட்டையில் மாசேதுங் பாட்ஜைக் குத்துவதற்கு, அவர் மீது பாய்ந்த சில சீன மாலுமிகள் முயன்றதாகவும், இதைத் தொடர்ந்து சீன மாலுமிகளுக்கும் பிரிட்டிஷ் கடற் தொழிலாளிகளுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நிலைமைமோசமடையாது, அங்கு சென்ற பொலிசார் தடைசெய்தனர்.

## மாசேதுங்கின் நெருங்கிய நண்பர் ஒருவர் கைது

தாய்பெய், ஒக். 6

சீனத் தலைவர் மா சே துங்குடன் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக நெருங்கிய சகாவாக விளங்கிவந்த ஒருவர், நேற்றுப் பீகிங்கில் கைதானார் என தாய்பெய்யிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மா சே துங்குக்கெதிராகச் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன், வேறு இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## டோக்கியோ கண்காட்சியில் சீனர் குழப்பம்

டோக்கியோ, ஒக். 9

டோக்கியோவில் நடைபெறும் திபெத்திய கண்காட்சி ஒன்றில், நூற்றுக்கணக்கான சீனர் புகுந்து, குழப்பம் விளைவித்தனர்.

பொலிசார் அங்குவந்து சீன ஆர்ப்பாட்டக்காரரைத் தடுத்து நிறுத்துவதற்குமுன்னர், கண்காட்சியில் வைத்திருக்கப்பட்ட சில பொருட்களைச் சீனர் அடித்துத்தள்ளி விட்டனர்.

இது சம்பந்தமாக, ஒரு சீனர் கைது செய்யப்பட்டார்.

## சீன ஆட்சேபத்தை இந்தோனேஷியா நிராகரிப்பு

ஜக்கார்த்தா, ஒக். 6

இந்தோனேஷியாவிலுள்ள சீனப் பொறுப்பதிகாரியையும், மற்றும் சீனத் தூதரகச் சிப்பந்திகளையும் சீனு கொண்டுவருவதற்குப் பீகிங் அரசாங்கம், விசேஷ விமானமொன்றை ஜக்கார்த்தாவுக்கு அனுப்பப் போவதாக இந்தோனேஷியாவிடம் அறிவித்துள்ளது.

சீனத் தூதரகப் பொறுப்பதிகாரியுட்படச் சீனத் தூதரகச் சிப்பந்திகள் பலரும், கடந்த ஞாயிறன்று ஜக்கார்த்தாவில் நடைபெற்ற இந்தோனேஷிய மாணவர் ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி இந்தோனேஷியாவிடம் சீனு சமர்ப்பித்த ஆட்சேபக் குறிப்பை இந்தோனேஷியா நிராகரித்துள்ளது.

இதுபற்றி இந்தோனேஷிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், சீனத்தூதரகம் மீது நடந்த தாக்குதல், பீகிங்கில் இந்தோனேஷிய தூதரகச் சிப்பந்திகளுக்குச் சீனுவை விட்டு வெளியேற அனுமதிச் சீட்டுகள் அளிக்கச் சீன அரசாங்கம் மறுத்துள்ளதனுல் ஏற்பட்ட மக்களின் ஆத்திரத்திஞல் விளைந்த தொன்றேயெனக் குறிப்பிட்டுள்ளது.

## சீனுவுக்கு கம்போடிய இளவரசர் எச்சரிக்கை

நாபென், ஒக். 6

கம்போடியாவின் உள்நாட்டு விபரங்களில் சீனு தொடர்ந்து குறுக்கிட்டுக் கொண்டிருந்தால், கம்போடியா அமெரிக்காவின் பக்கம் திரும்பவேண்டிய நிலை ஏற்படுமென்று கம்போடிய இளவரசர் நொரோடம் ஷிஹானூக் சீனுவை எச்சரித்துளள்ளார்.

கம்போடியாவிலுள்ள சீன சார்புள்ள இரு தலைவர்கள் பற்றி இளவரசர் குறிப்பிட்டு, அவர்கள் எவ்வளவு விரைவில் கம்போடியாவை விட்டு வெளியேறித் தமது சீன எஜமான்களின் நாட்டுக்குச் செல்கின்றனரோ அவ்வளவுக்கு நல்லது என்று கூறினர்.

## லோகியா நிலை கவலைக்கிடம்

புதுடில்லி, ஒக். 6

இந்திய சோஷலிஸ்ட் தலைவரான டாக்டர் ராம் மனேகர் லோகியாவின் உடல் நிலை கவலைக்கிடமளித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஆண்டுவிழா

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தின் முதலாவது ஆண்டுவிழா இம்மாதம் 20-ம் திகதி ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் தலைமையில் நடைபெறும்.

### நிறைவுவிழா

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க 36-வது ஆண்டு நிறைவுவிழா, வட்டு திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை ஊர் மன்றத் தலைவர் திரு. நா. சிவகுருநாதன் [illegible] கொண்டார். பலரும் உரை நிகழ்த்தினர்.

## பெருவுக்கு பிரான்ஸ் ஹெலிகொப்டர்கள்

வாஷிங்டன், ஒக். 6

தென் அமெரிக்கக் குடியரசுகளில் ஒன்ருன பெருவுக்குப் பிரான்ஸ் ஹெலிகொப்டர் விமானங்களை அனுப்பி வைக்க முடிவு செய்துள்ளது, வாஷிங்டனில் கவலையை ஏற்படுததியுள்ளது.

ஆர்ஜெண்டீனுவுக்கும் 50 டாங்கிகளைப் பிரான்ஸ் அனுப்பத் தீர்மானித்துள்ளது.

### ஆயுதப்போட்டி

இராணுவ சாதனங்களை பிரான்ஸ் இவ்விதம் தென் அமெரிக்கப் பகுதிகளுக்கு அனுப்புவது, அங்கு ஒரு புதிய ஆயுதப் போட்டியை ஏற்படுத்துமென வாஷிங்டன் கருதுகிறது.

இந்த விற்பனைகளால், பிரான்சுக்கும் அமெரிக்காவுக்குமிடையேயான உறவுகள் மோசமடையலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈமன்

## பொலீஸ் அதிபருக்கு மரணதண்டனை

சானு, ஒக். 6

ஈமனில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்களின்போது, அவர்கள்மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது, 5 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தையிட்டு, ஈமன் பொலிஸ் அதிபர் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

தென்வியட்னுமில்

## தீக்குளித்து சாக 110 பேர் தயார்

சைகோன், ஒக். 6

தென்வியட்னும் அரசாங்கம் தமது கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காவிடில், தமக்குத் தாமே தீமூட்டித் தற்கொலை செய்யத் தயாராகவிருப்பதாக 110 பௌத்த பிக்குகள், பிக்குணிகள், மற்றும் சாதாரணப் பிரஜைகள் முன்வந்துள்ளனர்.

சென்ற வருடம், காகீயின் தலைமையிலான தென்வியட்னும் ஆட்சியின் மதக் கொள்கையை ஆட்சேபித்து எட்டு பௌத்தர்கள் தீமூட்டித் தற்கொலை செய்து கொண்டனர்.

கடந்த செவ்வாயன்றும் ஓர் இளம் பிக்குணி தமக்குத் தாமே நெருப்பு மூட்டித் தற்கொலை செய்துகொண்டார்.

### லண்டன் பயணமானுர்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. வை. தாமோதரலிங்கம் கட்டிட நிபுணர் விசேட பயிற்சிக்காக அரசாங்க நன்கொடைப் பணத்தில் இரண்டு ஆண்டுகள் கல்வி கற்பதற்காக விமானமூலம் லண்டன் பயணமானுர்.

காலம் சென்ற புரக்டர் தா. வைத்திலிங்கத்தின் புதல்வராகிய இவர் சுழிபுரம் [illegible] ஹாரி பழைய மாணவராவார்.

## இரு ஜெர்மனிகளினதும் ஐக்கியத்துக்கு ஆதரவு

### இந்திய துணைப்பிரதமர் தேசாய் உறுதிமொழி

பம்பாய், ஒக். 6

இந்திய துணைப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் இன்று மேற்கு ஜெர்மனியிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தார்.

முன்னதாக பொன்னில், மீண்டும் இரண்டு ஜெர்மனிகளும் ஐக்கியப்படவேண்டுமென்ற மேற்கு ஜெர்மனியின் விருப்பத்துக்கு இந்தியாவின் ஆதரவிருப்பதாகத் தி. தேசாய் உறுதியளித்திருந்தார்.

### கெயிஸிங்கருடன் சந்திப்பு

திரு. தேசாய், நேற்று மேற்கு ஜெர்மனியின் அதிபரான டாக்டர் கெயிஸிங்கரைச் சந்தித்துப் பல சர்வதேசப் பிரச்னைகளையும், இந்தியா, மேற்கு ஜெர்மனி ஆகிய இரு நாடுகளுக்கிடையேயான உறவுகள், ஒத்துழைப்பு இவை பற்றியும் விவாதித்தார்.

ரஷ்யா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், கிழக்கு ஜெர்மனியுடன் தனது உறவுகளை வளர்க்க, மேற்கு ஜெர்மனி முயற்சி எடுத்து வருவதாக டாக்டர் கெயிஸிங்கர், திரு. தேசாயிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## இந்திய மத்திய சுகாதார மந்திரிகள் மாநாடு

புதுடில்லி, ஒக். 6

இந்திய மத்திய சுகாதார மந்திரிகள் மாநாடு, மூன்று நாள் கூட்டத்துக்குப்பின் நேற்று இங்கு முடிவடைந்தது.

ஆஸ்பத்திரிகள், டிஸ்பென்சரிகள், நர்ஸிங் இல்லங்கள் ஆகியவற்றைக் கைத்தொழிற் தகராறு மசோதாவிலிருந்து விலக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் செய்யப்படவேண்டுமென மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.

### தடை நடவடிக்கை

ஆஸ்பத்திரிகளில், டாக்டர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையே அதிகரித்துவரும் தகராறுகள், ஒழுங்கீனம் இவற்றுக்கெதிராகத தகுந்த தடைநடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனவும் மாநாடு கேட்டுள்ளது.

சட்டவிரோதமாக

### மான்உறுப்புகள் கொண்டுசென்றனராம்

யாழ்ப்பாணம், சனி

உடன்கொன்று எடுத்திருக்கக்கூடிய 4 சோடி மான் கொம்புகளும், ஒரு மான் தோலும் உயிருடன் இருந்த அழகிய புள்ளிமான் குட்டியொன்றும் கொண்டு வந்த ஒரு காரையும் 3 சந்தேக நபர்களையும் யாழ்ப்பாணம் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. ஆர். சகாயம், வண்ணை கிராம சேவகர் திரு. யூலியசின் உதவியுடன் யாழ்ப்பாணம் பெரிய தபாற்கந்தோர் முன்பாகக் கைதுசெய்து யாழ்ப்பாண மஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் முன்னிலையில் ஆஜர்செய்தார்.

லைசென்ஸ் இல்லாமலும் சட்டவிரோதமாகவும் மான்களைக்கொன்று காரில் கொண்டுவந்ததாகக் குற்றம் சாட்டி இன்ஸ்பெக்டர் திரு. சகாயத்திஞல் தொடரப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களான புளியங்கூடலைச் சேர்ந்த அருணுசலம் செல்லையா, கார்ச் சாரதி சடையர் கதிரவேலு, நாகமணி பொன்னம்பலம் ஆகியோரையும் காரையும் யாழ்ப்பாண மஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல். 6000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து வழக்கின் மேல்விசாரணையை ஒத்திவைத்துள்ளார். [வீ. நி]

### சேவைநலம் பாராட்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையில் பல்லாண்டு சேவைசெய்து அண்மையில் இளைப்பாறிய திரு. இ. கைலாயர் ஆசிரியரின் சேவைநலம் பாராட்டுவிழா பாடசாலை மண்டபத்தில் பாடசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் ஆ. சின்னத்துரை தலைமையில்நடைபெற்றது.

### 'விவசாய முகாம் நிறுவுக'

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி தொகுதியில 6 விவசாயப்படை முகாம்களை விரைவில் நிறுவுமாறு கிளிநொச்சி தொகுதி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் துணை அமைச்சர் கப்டன் செனிவரத்திஞவைக் கேட்டுள்ளார்.

இப்பொழுது இரண்டு முகாம்கள் நிறுவுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயப்படையில் சேருவதற்கு விண்ணப்பித்த 8000 பேரில் 2220 பேர் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஒருவரேனும் விவசாயப்படையில் இன்னமும் சேர்க்கப்படவில்லை. ஆறு முகாம்கள் அமைக்கப்பட்டால் இவர்கள் எல்லோரும் 18 பெரிய குளங்களைப் புதுப்பிக்கும் வேலை விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### எம் பி.யின் முயற்சி

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபை எல்லைக்குள் நிலமற்று இருக்கும் சிறுபான்மை மக்களுக்கு குடியிருக்க நிலங்களைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் ஈடுபட்டுள்ளார்.

திருவடிநிலை, பொன்ணலை, ஆகிய இடங்களிலுள்ள முடிக்குரிய நிலங்களை இவற்றுக்கு பயன் படுத்துவதிலும், வேறு வசதியுள்ள நிலங்களைப் பணம் கொடுத்து வாங்கி நிலமற்றவர்களைக் குடியேற்றவும் எம். பி. முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

### மக்கள் கஷ்டம்

சுழிபுரம், வெள்ளி

பண்ணுகம உபதபால் கந்தோரில் கடந்த மூன்று தினங்களுக்கு மேலாக பென்ஷன், மணியோர்டர் ஆகியவற்றின் பணம் பெற்றுக் கொள்ள முடியாமல் மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடி போதையில் பெண்?

குரும்பசிட்டி, வெள்ளி

ஏழாலையைச் சேர்ந்த நான்குபிள்ளைகளின் தாயான ரி. நாகம்மா என்ற பெண் மல்லாகம் சந்தியில் குடி போதையில் நிற்கக் காணப்பட்டதாக சுன்னாகம் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டார்.

மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு.ரி எஸ்.நிற்சிங்கா முன்னிலையில் இப்பெண் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி நன்னடத்தைப் பாதுகாவல் அதிகாரியை இவரது ஒழுக்கம் பற்றி இரு வார காலத்துக்குள் அறிக்கைசமர்ப்பிக்கக் கோரி மேல் விசாரணையை இம்மாதம் 15-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## சிசுவின் சடலம்: சந்தேக நபர் கோர்ட்டில் ஆஜர்

காங்கேசன்துறை, வெள்ளி

ஒரு வீட்டின் சமையல் அறையின் பின்னால் சுன்னாகம் பொலிசாரால் தோண்டி எடுக்கப்பட்ட பச்சிளம் சிசுவின் சடலம் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த அளவெட்டி வடக்கைச் சேர்ந்த நகம்மா என்ற பெண்ணை இன்று பொலிசார் மல்லாகம் கோர்ட்டில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை ரூ. 500 பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி அவரை 20-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

சந்தேக நபரின் சார்பில் வழக்கறிஞர் திரு. எஸ். நடராஜா ஆஜரானார். சார்ஜன்ட் கிருஷ்ணராஜா வழக்கை நடத்தினார்.

## தூஷித்ததாக வழக்கு

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் அத்தாய் என்ற இடத்தைச்சேர்ந்த கார்த்திகேசு மார்க்கண்டு என்பவர் அதே ஊரைச்சேர்ந்த வல்லிபுரம் மனைவி செல்லம்மாவையும் அவரது மகன் குமாரகுலசிங்கத்தையும்கடந்த ஆனி மாதம் 24ந் திகதி மாலிசந்தை சந்தியில் வைத்துத் தகாதவார்த்தைகளால் ஏசியதாகக் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு மருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியான மார்க்கண்டுவை குற்றவாளியாகக் கண்டு 500 ரூபா பிணையில் ஒருவருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

## சிறுவன் கைது

மானிப்பாய், வெள்ளி

சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் டயஸ் தலைமையில் பொலிஸ் கோஷ்டியினர் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் புகுந்து வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒரு பன்னிரண்டுவயது சிறுவனைத் திடீரெனக் கைதுசெய்தனர். சங்கானைகிழக்கைச் சேர்ந்த பூதன்மனோகரன் என்ற அச்சிறுவன் கைக்குண்டு தயாரிப்பதில் ஈடுபட்டதாக அறியப்பட்டது. கைக் குண்டு வெடித்ததனால் ஏற்பட்ட விபத்திலேயே அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவ்விபத்தில் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிவில்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மேலும் நால்வரும் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## வாலிபர் தற்கொலை

வல்வெட்டித்துறை, வெள்ளி

கரணவாய் வடக்கைச் சேர்ந்த இராசையாவின் மகனை 17 வயதுடைய தர்மகுலசிங்கம் என்பவர் தனது பெற்றோர் அம்பலாந்தோட்டைக் கடையொன்றிற் சென்று வேலை செய்யுமாறு கேட்டதன்காரணமாகநஞ்சு அருந்தி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

மரண விசாரணை நடத்திய அதிகாரி திரு. ஆர், எஸ். இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## பெற்றோர் கவலை

காங்கேசன்துறை, வியா.

தையிட்டிகணேசவித்தியாசாலையில் ஒரு வருடகாலமாக ஆங்கில ஆசிரியரும், தையற்கலை ஆசிரியரும் இல்லாது பாடசாலை மாணவ மாணவிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஆசிரியர்சங்கத்தினர் நடாத்தும் ஐந்தாம் தரப் பரீட்சைக்கு மாணவர்களை விடமுடியாமல் பெற்றோர் கவலையடைந்துள்ளனர். ஆங்கிலப் பாடம் சித்தியடையாவிட்டால் பரீட்சையில் சித்தியெய்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குறைபாடுகள் பற்றி வடபகுதி கல்வி அதிகாரிக்கு பலமுறை புகார் செய்தும் இதுவரை ஒருவித நடவடிக்கையும் எடுக்கப்படாததையிட்டு இப்பகுதிமக்கள் அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரிகிறது.

## ஆய்வு கூடம்

இமையாணன், வெள்ளி

தொண்டைமனாறு இந்து ஆங்கிலப் பாடசாலையில் ரூபா 25,000 செலவில் ஒரு விஞ்ஞான ஆய்வு கூடம் கட்டப்பட்டு வருகிறது இக்கட்டிடம் விஞ்ஞான கூடங்களுக்குக்கும் வகுப்பறைகளுக்குமெனப் பாவிக்கப்படும்.

## சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை, தம்பசெட்டியைச் சேர்ந்த ஆழ்வான் சுந்தரம், ஆழ்வான் நாகன், வேலன் ஆழ்வான் ஆகிய மூவரும் அதே குடும்பத்தைச் சேர்ந்த ஆழ்வான் செல்லனை இவ்வருடம் ஆடி மாதம் 21-ம் திகதி அடித்துக்கொலை செய்ததாக பருத்தித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப் படுத்தினார்.

## ஆஸ்பத்திரி ஓவசியராக பதவி உயர்வு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பண்ணை மார்பு நோய்சிகிச்சை நிலைய ஊழியரான திரு எஸ். ஆர், அருமைநாயகம் ஆஸ்பத்திரி ஓவசியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அகில இலங்கை தேசிய அரசாங்க தொழிற்சங்க சம்மேளனம், தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம் ஆகியவற்றின் பொதுக் காரியதரிசியாகவும், யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன கடன் நிவர்த்திச் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றும் இவர் இம்மாதம் 19-ம் திகதி முதல் மந்திகை ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இலங்கை முழுவதிலும் தற்போது பதவி உயர்வுபெற்ற 14 ஆஸ்பத்திரி ஓவசியர்களிலும் இவர் ஒருவரே தமிழர் எனபது குறிப்பிடத்தக்கது. [ந. நி]

## 'பல்கலைக்கழக பெயரை மாற்றவேண்டாம்'

யாழ்ப்பாணம், சனி

''கண்டியிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பெயரை கண்டிப் பல்கலைக்கழகம் என பெயர் மாற்ற வேண்டாம்.''

இவ்வாறு கோரி தற்பொழுது விடுமுறையில் இருக்கும் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி அமைச்சர் திரு. இரியகொல்லைக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

கண்டியிலுள்ளஇலங்கைப் பல்கலைக்கழகத்தை கண்டிப் பல்கலைக்கழகம் என்றும், கொழும்பிலுள்ள பல்கலைக்கழகத்துக்கு கொழும்புப் பல்கலைக்கழகம் எனவும் கல்வி அமைச்சு பெயர் மாற்ற உத்தேசித்திருப்பதை எதிர்த்தே இம்மகஜர் அனுப்பப்பட்டுள்ளது. [ந. நி]

## 50,000 ரூபா செலவில் விஞ்ஞானகூடம்

கிளிநொச்சி, வெள்ளி

உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் ஐம்பதினாயிரம் ரூபா செலவில் கட்டப்படும் விஞ்ஞான கூடத்திற்கு கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அடிக்கல் நாட்டினார்.

அவ்விழாவில் பா. உ. திரு. இரத்தினம் உரையாற்றுகையில் இரண்டாண்டுகளாகப் போராடியதாலேயே இந்த விஞ்ஞானகூடத்தைக் கல்விப்பகுதியினர் வழங்கியுள்ளனர். இந்தவிஞ்ஞானக் கல்வியை எல்லா மாணவர்களுக்கும் ஊட்டினாற்றான் இந்நாட்டில் வேலையில்லாத் [illegible] இன்னும் உணராது செயற்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

## ''சிரமதானமூலம் கிராமத்தை செப்பனிடுவதே காந்திய வழிபாடாகும்''

யாழ்ப்பாணம், சனி

''காந்தியடிகளின் போதனைகளைச் சாதனையிற் காட்டுவதே அவருக்கு நாம் செய்யும் கடப்பாடாகும். காந்தியடிகள் பாதயாத்திரையை மேற்கொண்ட சமயம் அவருக்குத் தொண்டர்கள் குதூகல வரவேற்புக்கு ஏற்பாடு செய்தனர். ஆனால் காந்தி வந்திறங்கிய இடத்தில் மழை காரணமாகப் பெரிய சேறும் சகதியும் கிடந்தது. காந்தி வந்திறங்கியதும் ஒரு மண்வெட்டி கொண்டு வரும்படி கேட்டார். ஒருவர் ஓடோடிக் கொண்டு வந்து கொடுத்தார். அவர் பிட்டியை வெட்டிச் சகதிக்குப் போட்டார். பலர் தடுத்தும் கேட்கவில்லை. நீங்களும் வெட்டிப் போடலாம். என்னைத் தடுக்க வேண்டாம்'' என்றார் நூற்றுக்கணக்கான மண்வெட்டிகள் வந்தன. அந்த வீதிசெப்பமாகச் சில மணி நேரமே பிடித்தது. அன்று தொடங்கியது தான் சிரமதானம். நாம் சிரமதானத்தை வலுவடையச் செய்து கிராமங்களைச் செப்பமிட்டால் அதுவே சிறந்த காந்தி வழிபாடாகும்.''

இவ்வாறு கலவெட்டித்திடல் காந்தி சேவாசபையாரால் நாகேசுவர வித்தியாலய மண்டபத்தில்நடாத்தப்பட்ட காந்தி விழாவில் தலைமை தாங்கி உரையாற்றிய சபைத்தலைவர் தலைமையாசிரியர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினார்.

செல்வி பரமேஸ்வரி கனகசபை [செயலாளர்], திரு. அ. வைரமுத்து கிராமசபை உறுப்பினர் திரு. வே. மயில்வாகனம், திரு. ஆ. முத்துக்குமாரு உட்படப் பலர் பேசினார்கள்.

## பட்டினசபை பெயர் மாற்ற கோரிக்கை

புன்னாலைக்கட்டுவன் வெள்ளி

உரும்பராய் பட்டின சபை ஊரெழுவின் பெரும் பகுதியையும் உள்ளடக்கி இருப்பதால் அப்பெயரை உரும்பராய் -ஊரெழு பட்டின சபையென மாற்ற வேண்டுமென்றும் பிரேரணைக்கான முன்னறிவித்தலை பட்டின] சபை உறுப்பினரான திருவாளர்கள் அ. காராளசிங்கமும், ச. செல்வரத்தினமும் மேற்படி பட்டின சபைத் தலைவர் திரு. க. பத்மராசாவிடம் கொடுத்துள்ளனர்.

## குருநகர் நெசவு நிலையம்

யாழ்ப்பாணம், சனி

சுமார் பத்தாயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள நெசவு நிலையமொன்று இம்மாதம் 23-ம் திகதி குருநகரில் திறந்து வைக்கப்படவிருக்கின்றது. இந் நெசவு நிலையத்திற்கு அரசாங்கம் ரூபா 6000 நன்கொடையாக வழங்கியுள்ளது. மிகுதிப்பணம் பொது மக்களிடம் வசூல் மூலம் பெறப்பட்டது இப்புதிய கட்டிட மேற்பார்வையைக் குருநகர் 2-ம் வட்டார சனசமூக நிலையத்தினர் பொறுப் பேற்று நடத்தினர்.

## அரசாங்கம் நன்கொடை

யாழ்ப்பாணம், சனி

தென் மராட்சி மேற்கு திருஞான சம்பந்தர் சபையினர் கைதடி நாவற்குழி கிராமசபைஎல்லைக்குள் நடாத்தும்பாடசாலைநேரகுசிகைகுப் புறம்பானவகுப்புகளுக்கு அரசாங்கநன்கொடையாக 922 ரூபாய் இந்து ஆலோசனைச் சபையினர் வழங்கியுள்ளனர்.

இச்சபை பல ஆண்டுகளாக ஏறக்குறைய ஆயிரம் சைவ மாணவர்களுக்கு சமயத்தில் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து சமய வகுப்புகள் நடாத்தி வருகின்றது என்பதுகுறிப்பிடத்தக்கது.

## மகா நாயக்காவுக்கு சுகவீனம்

கொழும்பு, வெள்ளி

மல்வத்தை மகாநாயக தேரோ வண. அமுனுகம ராஜகுரு ஸ்ரீவிபாசி சுகவீனம் காரணமாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்

## நோயாளர் அவதி

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம், பாணவெட்டி அரசினர் ஆஸ்பத்திரியில் போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லாததால் மக்கள் பல மணித்தியாலங்கள் காத்துக் கிடந்து மருந்து பெறுவதற்கு கஷ்டமடைய வேண்டியுள்ளதாக அறியப்படுகிறது.

சிங்கம் மார்க்

LION BRAND SANDANADI THYLAM
சிங்கமார்க்

சந்தனாதித் தைலம்
வாங்கி உபயோகியுங்கள், எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
போன் [illegible]
ப.மு.ஈசன்ஸ்
88, செட்டியார் தெரு, கொழும்பு 11

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
''வைத்திலிங்கம்ஸ்''
இரும்பு - பித்தளை மர ஸ்குறு ஆணிகளை
நீங்கள் வாங்குவதனால்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதைபந்தாட்ட போட்டிமுடிவுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மூன்றுவது பிரிவினருகரும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மூன்றுவது பிரிவினருக்குமிடையே நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 1—0 கோலால் ஹாட்லியைத் தோற்கடித்தது.

மேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையேநடைபெற்ற இரண்டாம்பிரிவுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 3—1 கோல்களால் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைத் தோற்கடித்தது. இப்போட்டிக்கு திரு. வீ. ராமகிருஷ்ணன்மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## கொழும்பு வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு 'சன்றைஸ்' கழகத்துக்குமிடையே சிநேகபூர்வமானஒரு பெரும் உதை பந்தாட்டமோதலில் கொழும்புக் கோஷ்டி 3—0 கோல்களால் சென்.பற்றிக்ஸ்கல்லூரியை வெற்றியீட்டியது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இம் மோதலில் ஆரம்பத்திலிருந்துமுடிவுவரைரசிப்பாகவே காணப்பட்டது.

இப்போட்டிக்கு திரு. ஈ. கே.குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

[வி.நி.]

## உதைபந்தாட்ட பயிற்சி

சாவகச்சேரி, வெள்ளி

தென்மராட்சி உதைபந்தாட்ட வீரர்களுக்கு உதைபந்தாட்டப்பயிற்சி நிபுணர் திரு. பெர்ஞன்டோவினுல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் பயிற்சி முகாம் அமைத்துப் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சிக்கு தென்மராட்சி விளையாட்டு உத்தியோகத்தர்கள் திரு.ஸ்ரீதரன், திரு.சிவரத்தினம் ஆகியோர் ஏற்ற ஒழுங்குகளைச் செய்தனர்,

## மா ஆலை
### அடுத்தஆண்டில் இயங்கும்

காட்டாஞ்சேனை, வெள்ளி

முகத்துவாரத்தில் மூன்று ஏக்கர் நிலத்தில் அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மா ஆலை அடுத்த வருட முற்பகுதியில் இயங்கத் தொடங்கும்.

இந்நாட்டின் கோதுமை மா இறக்குமதி அதிகரித்து வந்தமையால் இத் தொழிற்சாலை நிறுவும் யோசனையை அரசாங்கம் மேற்கொண்டது.1966-ம் ஆண்டு உள்நாட்டு மா உபயோகம் இரண்டரை லட்சம் தொன்னுக அதிகரித்திருந்தது.

சோவியத்ரஷ்ய அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்டுள்ள இந்த மாஆலை 50,000 தொன் மாவை அரைக்கும். இது நாட்டின் தேவையின் கால் பங்காகும்.இதன் பின்னர் இறக்குமதி செய்யப்படும் மாவின் விலையிலும் பார்க்க குறைந்த விலையில் மக்கள் மா வாங்கக் கூடியதாக இருக்கும்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


## 2-வது ஜனத்திரள் வாரம்!

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ண [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
ராஜ் [நீர்கொழும்பு]
மற்றும் 4 திரைகளில்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!

ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனு - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

# குழந்தையும் தெய்வமும்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்


## புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, வெள்ளி

இலங்கை கூட்டுறவு ஆய்வாளர் கழகத்தின் வருடாந்த மகாநாடும் பொதுக் கூட்டமும் தலைவர் திரு ஆர். ஜேசுதாசன் தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகக் கீழ்க்காண்போர் தெரிவுசெய்யப்பட்டனர்:—

தலைவர்:திரு. ஆர். ஜேசுதாசன், உபதலைவர்: திரு க. முருகையா, காரியதரிசி; திரு.மு. ஜெயராசசிங்கம், உபகாரியதரிசி: திரு. ஆர். சிதம்பரநாதன், தனாதிகாரி; திரு.பி.இரத்தினசபாபதி.

ஏழுபேர் கொண்ட நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

அளவெட்டி, வெள்ளி

அளவெட்டி மேற்குச் சன சமூக நிலைய மண்டபத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு.க. நாகலிங்கம் உப தலைவர் அ. முத்துத்தம்பி காரியதரிசி, திரு. சி. பரமேஸ்வரன் உபகாரியதரிசி கிரு.இ. சிவகுருநாதன் பொருளாளர் திரு.க. செல்லத்துரை.10 அங்கத்தவர்களைக்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

கொழும்பு,சனி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் வருடாந்தக் கூட்டம்,பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், சங்கத் தலைவரும் இந்துக்கல்லூரி அதிபருமாகிய திரு.ந. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ந.சபாரத்தினம், துணைத்தலைவர்கள்: நீதியரசர்திரு வி.சிவசுப்பிரமணியம்,திரு.ம.ஸ்ரீகாந்தா, திரு.கு. பாலசிங்கம், டாக்டர் எஸ். நடராஜா, திரு. கே. சீ.தங்கராசா, திரு.வி. சுப்பையா, செயலாளர்: திரு. எஸ். துரைசிங்கம், துணைச்செயலாளர்: திரு.சி. மகேஸ்வரன். தனாதிகாரி: திரு.வி.வெற்றிவேற்பிள்ளை, துணைத் தனாதிகாரிகள்: திரு. எஸ்.கனகசபை, திரு. எஸ். செல்லகாந்தன். ஒன்பது பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.


ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
The Moving Target
(More Suited for Adults)
9-10-67 முதல்
தங்கை

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
என். டி. ராமராவ்
நடித்த
ராஜ மகுடம்

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, 9-45
EUROPE BY NIGHT
(Adults Only)

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45. p. m.
SEAN CONARY
in
Dr. NO


## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், சனி

வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நவராத்திரி விழா கொண்டாடப்படுகிறது. தினமும் பேச்சுக்களும் விசேஷ நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. இவ்விழாவை தலைமை ஆசிரியர் திரு. மா. தம்பிராசா நடாத்தி வருகிருர்.

### பாராட்டு

கோண்டாவில்,வெள்ளி

கோண்டாவில் மேற்குகலவன் சாதனு பாடசாலையை தரம் உயர்த்த உதவி புரிந்ததற்காக நல்லூர் பா.உ,டாக்டர் இ. எம். வி. நாகநாதனுக்கு வேதபாராயண சன சமூக நிலையம் நன்றி தெரிவித்துள்ளது.

### மாட்டுநோய்

பூநகரி, வெள்ளி

பூநகரிப்பகுதியில் மாட்டுநோய் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றது. இதன் காரணமாக சுமார் 35க்கு மேற்பட்டமாடுகள் இறந்துவிட்டன. இதைத் தொடர்ந்து ஆடு,கோழிகளும் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி சுகாதாரப்பகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### நடிகர்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பின்னுல் இருந்த காரணம் ஒரு படம் சம்பந்தமாக இருந்த தகராறே என்று இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அருள் பத்திரிகையாளரிடம் கூறியிருந்த பகுதியை வழக்கறிஞர் சுட்டிக்காட்டினர்.

"இன்ஸ்பெக்டர் ஜெனரல் அருள் கூட்டிய பத்திரிகை, மகாநாட்டில் படத்தகராறு தான் இச் சூட்டுச் சம்பவத்திற்குக் காரணமென குறிப்பிடப்பட்டிருந்ததைச் சாட்சி ஒப்புக் கொண்டார்." அரசியல் காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனுல்இன்ஸ்பெக்டர் ஜெனரல் அருளின் பத்திரிகை மகாநாடு பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லையாதலால் தாம் ஒரு புலன் விசாரணை அதிகாரி என்ற முறையில் அதுபற்றி எதுவும் கூறமுடியாமல் இருப்பதாகச் சாட்சி கூறினர்."எம்.ஜி.ஆருக்கும் ராதாவுக்குமிடையில் அரசியல் பேதங்கள் இருந்தன என்பதை நான் அறிந்து கொண்டேன்" என்றுர் அவர்.

"எம். ஜி. ஆரைவிடுவிக்கவும், ராதாவைப் பொய்யான முறையில் சம்பந்தப்படுத்தவும் சாட்சி எம். ஜி. ஆரால் தூண்டப்பட்டாரென்ற வழக்கறிஞரின் கூற்றை சாட்சி மறுத்தார்.

'என்மடிவு'என்ற கடிதம் எம்.ஜி.ஆருடன் நெருங்கிய தொடர்புள்ள சிலரின் உதவியுடன் சாட்சியினுல் தயாரிக்கப்பட்டதென்பதையும் மறுத்தார்.

## வரி விளம்பரம

### தேவை

விற்பனையாளர்கள்:

வீடுகளுக்குச் சென்று தேயிலை விற்பதற்கு இளைஞர்கள் தேவை. முயற்சியுடையவர்கள் நல்ல ஊதியம் எதிர்பார்க்கலாம். நேரில் சந்திக்கவும். நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சிஸ் லிமிடெட். 20, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 2220

### வாடகைக்கு

வீடு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியில், படுக்கை அறைகள், இரண்டு ஸ்ரோர்ரும் கொண்ட மின்சார வசதியுள்ள வீடு பிரயோசனங்களுடன் வாடகைக்கு உண்டு. பள்ளிக்கூடம், புகையிரத நிலையம், பஸ் தரிப்பு நிலையம் முதலியவற்றிற்கு அண்மையில் உள்ளது. விபரங்கட்கு திருமதி எஸ். ரத்தினம், 669, கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2208

### கல்வி

ஆங்கில வகுப்பு

மாலை 4-15—5-15 வரை அனுபவமும் ஆற்றலுமிக்க ஆசிரியை ஒருவரால் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. மேலும் கேத்திரகணித வரைதலும் பொறிமுறை வரைதலும்(Geom & Mechanical Drawing) வகுப்பு இன்ஜினியர் ஒருவரால் நடாத்தப்படும். விபரங்களுக்கு: I. S. இராசா, கொலிஜ் ஒவ் எடியுகேசன், இராசாக் கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2222

### விற்பனைக்கு

காணி

பலாலி ரோட் கோண்டாவில் சந்திக்கும் விவசாயக் கல்லூரிக்கும் இடையில் 8 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சு. பாலசுப்பிரமணியம், 20, மெயின் ஸ்ரீட், யாழ்ப்பாணம். 2221

காணி

அரியாலை, 12/3, கனகரத்தினம் வீதியில் குடியிருக்கக்கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மா. கந்தையா, கனகரத்தினம் ரோட், யாழ்ப்பாணம். 2223

### மரண அறிவித்தல்

தர்மபுரத்திலுள்ள இராமசாமி வெங்கடாசலம் வயது 60 நேற்று [6-10-67] அதிகாலை 5 மணியளவில் இயற்கை எய்தியுள்ளார். இன்றுகாலை 10 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

மகன் வேலாயுதம்.

2224


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னகம்
பிரவேச விண்ணப்பங்கள் 1968

1. C. C. E. O/L [சாதாரணம்] முதலாம் வருடம்
C. C. E. A/L [உயர்தரம்] முதலாம் வருடம்
ஆகிய வகுப்புக்களில் மாத்திரம் சில இடங்களுண்டு.

வயது:-
G. C. E. O/L முதல் வருடம்: 1-1-55 இன் பின் பிறந்தவர்.
G. C. E. A/L முதல்வருடம்: 1-1-52 இன் பின் பிறந்தவர்.

விண்ணப்பங்கள் 20-10-67-க்குப் பிந்தாமல் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைக் கல்லூரிக் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

2. பிரவேசப் பரீட்சைகள் மேல்வருந் திகதிகளில் நடைபெறும்:
G. C. E. A/L [உயர்தரம்] முதலாம் வருடம் 23-11-67
C. C. E. O/L [சாதாரணம்] முதலாம் வருடம் 30-11-67

ஸ்கந்தவரோதயக் கல்லூரி, அதிபர்.
சுன்னகம். 5-10-67. 278


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

''நீதியின் கரங்களிலிருந்து தப்பிவிட்டாய்

நீதியை ஏமாற்றியதாக எண்ணவேண்டாம்''

— நீதியரசர்

# அளவெட்டிக் கொலை வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி

'நீதியின் கரங்களிலிருந்து தப்பிவிட்டாய். இக்கொலைக்கு நீயும், மாணிக்கம், கந்தசாமி ஆகிய இருவரும் உடந்தையாக இருந்திருக்கிறீர்கள். இக்கொலைக்கு காரணம், நீரும் இறந்தவரும், இவ்விருவர்களின் மனைவிமாருடன் கொண்டாட்டம் வைத்திருந்திருக்கிறீர்கள், அதனால் இருவருக்குமிடையில் எரிச்சல், பொருமை ஏற்பட்டது.'

அளவெட்டி கொலை வழக்கில் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தபோது, நீதியரசர் வி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் மூன்ருவது தினமாக நேற்று நடைபெற்றது. தீர்ப்பை அறிவதற்காக நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ்வழக்கில் 66-ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி சுப்பிரமணியம் சிவகுருநாதனை கொலைசெய்ததாக சின்னத்துரை தர்மலிங்கம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர்களான எஸ். அமிர்தலிங்கம், சி. பரமசிவம்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. உலகநாதனும் முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் கே. இரத்தினேசரும் ஆஜரானார்கள்.

நீதியரசரின் உரைமுடிந்ததும், ஜூரி சபையினர் தனிமையில் சென்று மந்திராலோசனைசெய்தபின், எதிரி குற்றவாளியல்லவென ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்.

இதனை தொடர்ந்து நீதியரசர், மாணிக்கம், கந்தசாமி ஆகிய இருவரையும், நீதிமன்றத்திற்கு வரும்படி கூறினார்.

நீதியரசர் தீர்ப்பளிக்கும்போது எதிரியிடம் கூறியதாவது: ஜூரி சபையினர் ஏகமனதாக நீ கொலைக்குற்றவாளியல்லவென தீர்மானித்திருக்கிறார்கள். உன்னுடைய நல்ல காலம், நீதிபரிபாலனத்தின்படி சாட்சிகளைக் கொண்டே வழக்கு தீர்மானிக்கப்படும். இந்த வழக்கில் பொலிஸார் விசாரணைக்கு பல இடையூறுகள் ஏற்பட்டுள்ளது. பொலிஸார் முழு விசாரணையையும் நடாத்தி குற்றச் சாட்டுகளை ஒப்பனை செய்ய முடியாமல் போய்விட்டது. இதில் நிறைவேற்றப்படாமலிருந்த ஓர் அம்சம் உன் கார் சில்லின் அடையாளம் அதுதான் உன்னைக்காப்பாற்றியது.

நீதியை ஏமாற்றிவிட்டேன், தப்பிவிட்டேன் என்று இக்கூண்டைவிட்டு வெளியேறும்போது எண்ணவேண்டாம். இன்ஸ்பெக்டர் மெண்டிசுக்கு நீ அளித்த வாக்குமூலம் இருக்கிறது. அந்த வாக்குமூலம் ஜூரி சபையினருக்குத்தெரியாது.

இக்கொலைக்கு நீயும், இந்த இரண்டுபேரும் [மாணிக்கம், கந்தசாமி] உடந்தையாக இருந்திருக்கிறீர்கள். [மாணிக்கம் கந்தசாமியைப் பார்த்து] எதிரி தர்மலிங்கம், கொடுத்த வாக்குமூலத்தின்படி சிவகுருநாதனைக் கொலைசெய்ய நீங்கள் இருவரும் சேர்ந்திருக்கிறீர்கள். இன்ஸ்பெக்டர் மெண்டிஸுக்குக் கொடுத்த வாக்குமூலத்தைப் படித்து முழுவதும் உண்மை என ஏற்றுக்கொள்கிறேன்.

அசைஸ் விசாரணை இன்று காலை நடைபெறும்.

## 'இவர்களை கைதுசெய்க'

### பொலிஸ் அதிபர் உத்தரவு

யாழ்ப்பாணம், சனி

சங்கானைப் பகுதியில் சாதிப் பெயர் குறித்துப் பேசுபவர்கள் அனைவரையும் உடனடியாக கைதுசெய்யுமாறு வடபகுதிப் பொலிஸ் சுப்ரிண்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இப்பகுதியில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்தே இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந. நி.)

## வஞ்சந்தீர்க்கும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புகாரைத் தொடர்ந்து அனுப்பப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையில், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது!-

'சிலசமங்களில்பொலிசார் முறைதவறி நடக்காவிட்டாலும் பலாத்காரம் பிரயோகித்ததாகச் சமீபத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் பொதுமக்கள் கவனத்தை ஈர்ந்துள்ளன. துரதிர்ஷ்வசமாகஇச்சம்பவங்கள் பற்றிப் பொலிசார் எடுத்துக்கொண்ட நவடிக்கைகளைப் பற்றிக் கண்டனங்கள் கிடைத்துள்ளன.

இவை சட்டத்தை அமுல் நடத்தும் நோக்கத்துடன் அல்ல. ஆனல் பொலிசார் வேண்டுமென்று பதில் நடவடிக்கை எடுப்பதாக குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. பல சமயங்களில் பொலிஸார் தனிமையில் அடி, உதை ஆகிய அவமரியாதைகளுக்கு உட்படவேண்டியிருக்கும். இதற்காகப் பொலிசாரும் பலாத்காரம் பிரரயாகித்தால் பொலிஸ் படைசெய்துவரும் நல்ல காரியங்களுக்கு ஊறுதேடுவதாகவேயிருக்கும்.

பொலிசார் எப்போதும் மிகவும் பொறுமையுடன் நடந்துகொள்ளவேண்டும். அநாவசியமாகப் பலாத்காரம் பிரயோகிக்காது, பொலிசார் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடாத்தவேண்டுமென்ற காரணத்துக்காக அளவுக்கு மீறக்கூடாது.' [ந. நி.]

# யாழ்ப்பாணத்தில் பலாத்கார சம்பவம்

## சந்தேக நபர் தலைமறைவு

யாழ்ப்பாணம், சனி

பதினுன்கு வயது இளம் பெண் ஒருவர் மூன்று குழந்தைகளின் தந்தை ஒருவரால் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்துள்ளது. சம்பவத்தின்பின் தன் உயிரை மாய்த்துக்கொள்ள கிணற்றில் வீழ்ந்த இந்த இளம்பெண்ணை அயலவர்கள் காப்பாற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய சந்திக்கு அருகிலுள்ள வீட்டில் வசிக்கும் செல்வி ஸ்ரீரஞ்சினி என்ற இளம் பெண் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் இருந்து திடீரெனக் காணுமல் போனதாக பொலிஸில் அவரது பெற்றோர் செய்த புகாரைத் தொடர்ந்தே நேற்றுக் காலை இப்பெண் வளவுக் கிணற்றுள் கிடக்கக் காணப்பட்டார்.

இப் பெண் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தன்னை, அருகில் உள்ள தேநீர்க் கடைச சொந்தக்காரரான ஒருவர் தான் கிணற்றடிக்குச் சென்ற சமயம் தூக்கிச் சென்று பலாத்காரம் பிரயோகித்ததாக தெரிவித்துள்ளார். இவர் உடனடியாக வைத்தியபரிசோதனை செய்யப்பட்டார். சந்தேக நபர் தலைமறைவாக இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பெண்ணின் உடுப்புகள் ரசாயன பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன [ந. நி]

## வெலிமடை உப-தேர்தல் மீண்டும் நடைபெறும்

### சமரவீராவின் பதவி செல்லாது

கொழும்பு, சனி

வெலிமடை உப-தேர்தல் மீண்டும் நடைபெறும். பொதுத்தேர்தலின்பின் நடந்த உபதேர்தலில் திரு. பேர்ஸி சமரவீரா தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், இவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி செல்லுபடியாகாதென தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனல் திரு. சமரவீரா பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கிருர்.

சுப்பிரிம் கோர்ட் நீதியரசர் திரு. ஜி. பி. ஏ. சில்வா வெலிமடை தேர்தல் ஆட்சேப வழக்கில் தீர்ப்பளிக்கையில் ஆட்சேப மனுவை ஏற்று, வழக்குச் செலவையும் கட்டுமாறு தெரிவித்தார். உப-தேர்தலில் அடுத்தபடியாக அதிக வாக்குகளைப் பெற்றவரான திரு. ஜேம்ஸ் சில்வாவை முறைப்படி தெரிவுசெயயப்பட்ட அபேட்சகராக அறிவிக்கும்படி கோரப்பட்ட இன்னொரு மனுவை நீதியரசர் நிராகரித்தார்.

65-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் திரு. பேர்ஸி சமரவீரா வெலிமடை தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல்செய்யப்பட்ட வழக்கில் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி செல்லுபடியாகாதென தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற உபதேர்தலில் மீண்டும் திரு. சமரவீரா போட்டியிட்டு வெற்றிபெற்ருர். இதனை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட ஆட்சேப வழக்கில், இவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி செல்லுபடியாகாதென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## சையிக்கிள் திருட்டு

பூநகரி, வெள்ளி

பூநகரி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக்கடமையாற்றும சங்கீத பூஷணம் திரு. செ. சிவபாத சுந்தரம் வீட்டில் அவருடைய புதிய 'றலி' சைக்கிள் திருடப்பட்டது. இதுபற்றி பூநகரிக் காரியாதிகாரியிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## எம். ஜி. ஆர். — ராதா வழக்கு

# நடிகர் ராதா 16-ம் தேதி விசாரிக்கப்படுவார்

சென்னை, அக். 6

நடிகர் ராதா இம்மாதம் பதினூரும் தேதி விசாரிக்கப் படுவார்.

சினிமா நடிகர்கள் எம். ஜி. ஆர்.- எம். ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டு வழக்கு நேற்று சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி திரு. லக்சுமணன் முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டது.

புலன் விசாரணை அதிகாரி திரு. ஜி. கே. ரெங்கநாதன் நேற்று எதிரிதரப்பு வழக்கறிஞரால்தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சாட்சி கூறியதாவது:-

அசோகா ஹோட்டல் ஊழியர் ஒருவரிடம், கோயம்புத்தூர் சினிமா தொழில் சம்பந்தப்பட்ட கோஷ்டியொன்று ஜனவரி 12-ம் தேதி ஹோட்டலில் தங்கியிருந்தார்களா என்று விசாரித்தேன். அவர் ஒருவரும் அப்படித் தங்கியிருக்கவில்லை என்று கூறினுர்.

ராதாவுக்கு சென்னையில் நியாயமான விசாரணை கிடைக்காது என்பதற்காக அவர் சென்னைக்கு வெளியே விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரி ராதாவின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட இடமாற்ற மகஜரிலுள்ள ஏழாவது பந்தியை எதிரி தரப்பு வழக்கறிஞர் நடராசன் சாட்சியிடம் காண்பித்தார். அப் பந்தியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்குப்

[5-ம் பக்கம் பார்க்க]

## யார் பொறுப்பு ?

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்று பிற்பகல் 5 மணி வரை பரிசோதகர்கள் வரவுமில்லை, அதைப்பற்றி ஒரு அறிவித்தலும் இல்லை என்று மகனும் மற்றைய பரீட்சார்த்திகளும், கவலையுடனும் ஏமாற்றத்துடனும் திரும்பினர்.

முன்னறிவித்தல் எதுவுமின்றி பரீட்சைகளை ரத்து செய்வதால் பிள்ளைகளுக்கும் பெற்ருருக்கும் எவ்வளவு, சிரமம், செலவு, ஏமாற்றம் என்பதுசொல்லித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. பரிசோதகர் குழுவில் வழக்கமாக மூவர் இருப்பர் ஒருவருக்கு ஏதும் தவிர்க்க இயலாத காரணத்தால் சுணக்கம் ஏற்பட்டால் மற்றையோர் பரீட்சையை நடத்தலாமென நினைக்கிறேன்.

த. க. சிவஞானம் யாழ்ப்பாணம்.

# பெண் தீக்கிரை

## வியாபாரிமூலையில் பரிதாப சம்பவம்

உடுப்பிட்டி, வெள்ளி

தீ விபத்தில் படுகாயமுற்ற பெண்ணெருவர் மூன்று தினங்களின் பின் மரணமானுர். கரவெட்டி வடக்கு வதிரியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தசாமி என்பவரின் மனைவியான திருமதி கந்தசாமி [வயது 30] என்னும் மாதே தீ விபத்தில் பரிதாப மரணமுற்றவராவார்.

காலஞ் சென்றவர் வியாபாரி மூலை என்னுமிடத்தில் வசித்து வந்ததாகவும்சம்பவம் நடைபெற்ற இரவு 9மணியளவில் மேசைமேல் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களை உண்பதற்கு எலியொன்றிற்கும் பூனையொன்றிற்கும் இடையில் நடைபெற்ற ரகளையின்போது மேசைமேலிருந்த விளக்கு கீழே உருண்டு வழுந்துநித்திரையாயிருந்த காலஞ் சென்றவரின்சேலையில் தீப்பற்றியதாகவும் இதனல் பலத்த எரிகாயங்களுடன் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டதாகவும் அறியப்படுகிறது. பின்னர் அபாயகரமான நிலையில் அங்கிருந்துயாழ். பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கே பிரஸ்தாப பெண்மணி செவ்வாய்க்கிழமை காலை மரணமானுர். இறந்தவர் மூன்று பிள்ளைகளுக்குத்தாயாவார். இவரது கணவர் புகையிரத நிலைய அதிபராவார்.

## இம்சைக்கு . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீமாவோ கூக்குரல் இட்டதும் அதற்குப் பிரதமர்நடவடிக்கை எடுக்கிருர். ஆனல் இம்மாதிரியான பலாத்கார சம்பவங்களுக்கு பிரதமர் பராமுகமாக இருப்பது ஏன்?'' என்று பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் இதுசம்பந்தமாக நமது நிருபர் கேட்டபோது தெரிவித்தார்.

## தேசிய சம்பள.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அண்மையில் தொழில்மந்திரி அறிவுறுத்திஞர். அதன் பேரில் இப்பொழுது தேசிய சம்பள நிர்ணய சபையொன்றை நிறுவுவதற்கு சட்டம் கொண்டுவரப்படவிருக்கின்றது.

நாட்டில் உள்ள அனேக ஸ்தாபனங்களில் ஊழியர்களின் சம்பளம் திருப்திகரமாய்இல்லையென்று தொழில் மந்திரி கருதுவதாகவும் தேசிய சம்பள நிர்ணயசபை உருவானல் சம்பளம் விஷயமாக முதலாளி — தொழிலாளி தகராறுகள் குறையும் என்றும் தொழில்மந்திரி கருதுவதாகத் தெரிகின்றது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 5-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டேபர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org